அமர்வு வழக்கு எண்.43/2019, அ.சா.1 திரு.வேலு நாள் 25.11.2021

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறார்.
முதல் விசாரணை தொடர்ச்சி ( பிற்பகல் 12.08 - 1.30 )

அ.சா.1 இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்ற நகைகளை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார். தங்க நதியா கம்மல் ஒருஜோடி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உடைந்த தங்க தாலி (ஒன்று) சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தங்க தாலிகுண்டு (இரண்டு எண்ணிக்கை) சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தங்க நாணல் குழாய் (இரண்டு எண்ணிக்கை) சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தங்க மூக்குத்தி மற்றும் அதன் தொங்கட்டான் (இரண்டு எண்ணிக்கை) படிவம் 95ல் தொங்கட்டான் 2 என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அந்த அயிட்டத்தில் சிறிய மூக்குத்தியும், சிறிய தொங்கட்டானும் உள்ளது. அந்த மூன்று அயிட்டமும் சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட நகைகளை பார்த்து உன் மனைவியினுடையதா என்று கேட்டார்கள். நான் என் மனைவியின் நகைகள் தான் என்றுஅடையாளம் காட்டினேன். கொஞ்ச நாள் கழித்து நகைகளை இடைக்காலப்பொறுப்பில் வாங்கிச்சென்றேன். வீட்டில் அப்படியே வைத்திருந்தேன். தற்போது ஆஜர்படுத்தினேன். இந்த நகைகளை குறியீடு செய்துவிட்டு மீண்டும் இடைக்காலப்பொறுப்பில் சாட்சியிடம் வழங்கப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தொழில் வழக்கமாக கொத்தனார் தொழில் என்றால் சரிதான். வீடூர் கிராமத்தில் கல்லாங்குப்பத்தில் குடியிருக்கிறேன். நான் வேம்பூண்டி கிராமத்திற்கு கொத்தனார் வேலைக்கு போனேன். அப்போது வேம்பூண்டியிலிருந்த ரெஜினா என்னுடன் வேலை செய்ய வந்தார் என்றால் சரிதான். நாங்கள் ஒன்றாக வேலை செய்யும்போதுதான் எங்களுக்குள் காதல் ஏற்பட்டது என்றால் சரிதான். ரெஜினாவின் பெற்றோர்களுக்கு தெரியாமலேயே அழைத்து வந்து திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். அதனால் நீண்ட நாட்கள் ரெஜினாவின் குடும்பத்தினருக்கும், எனக்கும் சுமார் 4,5 மாதங்கள் உறவு சுமுகமாக இல்லை. அதன்பிறகு சுமுகஉறவு இருந்தது. என் திருமணம் நடந்த தேதி 2007ம் வருடமா 2009தா என்று ஞாபகமில்லை. திருமணத்திற்கு பிறகும் என் மனைவி கொத்தனார் வேலைக்கு போனார் என்றால் திருமணத்திற்கு விவசாய கூலிவேலைக்கு போவார். கொத்தனார் வேலைக்கு போகமாட்டார். நானும், எனது அண்ணனும் தனித்தனி குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது அண்ணனும் கல்லாங்குப்பத்தில் பக்கத்து பக்கத்து வீட்டில் தான் வசிக்கிறோம். எனக்கும், என் அண்ணனுக்கும் எந்த விரோதமும் இல்லை. நலல உறவு முறையில் தான் இருந்தோம். தனலட்சுமி என்பவர் உறவுக்காரர் தான், 2 வீடு தள்ளி பக்கத்து வீடு.

தனலட்சுமியின் மாமியார் சரோஜா அவரும் என் உறவினர் என்றால் சரிதான். 3ம் தேதி எந்த ஊருக்கு சென்று கோவிந்தராஜை பார்த்து நகையை கொடுத்தார் என்றால் என்னிடம் சொல்லும்போது, வேம்பூண்டி கிராமத்திற்கு போய் கோவிந்தராஜை பார்த்து நகையை கொடுத்துவிட்டு வருகிறேன் என்று சொன்னார். அன்றைய தினம் நான் வேலைக்கு போய் இருந்தேன். என் மனைவி மட்டும் தான் வேம்பூண்டிக்கு போய் கோவிந்தராஜை பார்த்து நகையை கொடுத்துவிட்டு வருவதாக சொன்னார். அந்த நகைகளை திண்டிவனம் வெற்றி ஜூவல்லர்சில் வாங்கினோம். வருடம் ஞாபகமில்லை. சம்பவத்திற்கு 7,8 மாதங்களுக்கு முன்பு தான் அந்த நகையை வாங்கினோம். நாங்கள் இருவரும் போய் தான் நகையை புதிதாக வாங்கி வந்தோம். அந்த நகையை ரூ.1,20,000மா அல்லது ரூ.1,30,000மா என்று நினைவில்லை, சுமார் அவ்வளவு தொகை கொடுத்து வாங்கினோம். அந்த 6 பவுன் நகையை என்னுடைய மனைவி ரெஜினா பெயரில் தான் வாங்கினேன். அந்த நகையை வாங்கும்போது ரசீது கொடுத்தார்கள். அது செயின் தான், அது எந்த மாடல் என்று தெரியவில்லை. செயின் சங்கிலி கோர்த்த மாதிரி இருக்கும். சத்துணவு வேலைக்கு பணம் கேட்டார்கள், அதற்காக நகையை அடமானம் வைப்பதற்காக போனார். எங்கள் ஊரில் சத்துணவு சமைக்கும் வேலை காலியாக இருந்தது. என் மனைவி 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். பணத்தை யாரிடம் கொடுப்பதற்காக நகையை அடமானம் வைத்தோம் என்றால், வேலைக்கு எழுதி போட்ட இடத்தில் ஒரு நபர் கேட்டார். அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. அவர் எவ்வளவு தொகை கேட்டார் என்றால் பணம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். எவ்வளவு தொகை என்று என்னிடம் சொல்லவில்லை. கூட்டேரிப்பட்டு பி.டி.ஓ ஆபிசில் வேலை செய்யும் ஒரு நபர் எங்களிடம் பணம் கேட்டார். பணம் கேட்ட அந்த நபர் அரசு வேலையில் இருந்தார். அவர் பெயர், ஊர் எனக்கு தெரியாது. அரசுப்பணியில் இருக்கும் தெரியாத நபரிடம் பணம் கொடுத்தால் ஏமாற்றிவிடுவார்கள் என்றால் நம்பிக்கையாக வேலையை வாங்கி தருகிறேன் என்று சொன்னதால் தான் நாங்கள் முயற்சி செய்தோம். அவர் பெயர் ஊரை நாங்கள் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. நான் நகையை அடமானமே வைத்ததில்லையா என்று கேட்டால் நகைகையை நானே அடமானம் வைக்காமல், கோவிந்தராஜிடம் அடமானம் வைக்க சொன்னதன் காரணம் என்ன் என்றால் நான் வேலைக்க போனதால், என் மனைவி கோவிந்தராஜிடம் கொடுத்து அடமானம் வைக்க கூறியபோது, அவர் என் மனைவிக்கு மாமா பையன் என்பதாலும், உறவினர் என்பதாலும் கூறினேன். என் மனைவியே அடமானம் வைத்திருக்கலாமே, அவர் ஏன் கோவிந்தராஜிடம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால், தெரிஞ்ச பையன் தானே, விவரம் தெரியும் வச்சி கொடுக்க சொல்லாம் என்று சொல்லியுள்ளார். 12ம் வகுப்பு படித்த என் மனைவிக்கு விவரம் தெரியாமல் தான் கோவிந்தராஜிடம் கொடுத்து வைத்தாரா என்றால் சொந்தக்காரப்பையன், மாமா பையன், விவரம் தெரிந்தவன் என்ற நம்பிக்கையில் தான் கொடுத்திருக்கிறார். வேம்பூண்டிக்கு போய் நகையை கொடுக்கும்போது முருகன், ஆறுமுகம் ஆகிய

என்னுடைய மைத்துனரும், ரெஜினாவின் சகோதரர்கள் முன்னிலையிலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த நகை என் மைத்துனர்களுக்கு தெரியாது என்றால் சரிதான். என் மாமனாருக்கும, மாமியாருக்கும் இந்த விவரம் தெரியாது என்றால் சரிதான். அந்த நகையை முத்தூட்பைனான்சில் வைத்துபணம் வாங்க என் மனைவி கோரியிருந்தார். முத்தூட்பைனான்சில் நகையை வைக்கவேண்டும் என்று முடிவு செய்தது என் மனைவியா என்றால் தெரியவில்லை. என் மனைவியா, இருவரும் சேர்ந்து முடிவு செய்தார்களா என்று தெரியவில்லை. என் வீட்டிலிருந்து கிளம்பி போகும்போதே, எங்கு நகையை வைக்கப்போகிறார்கள் என்று தெரியாது. என் மனைவி என்னிடம் சொன்னபோது தான் முத்தூட்பைனான்சில் வைக்கப்போவதாக தெரியும். இந்தசம்பவத்திற்கு முன்பு என் மனைவி எப்பவாவது கோவிந்தராஜ் மூலமாக நகையை அடமானம் வைத்திருக்கிறாரா என்றால் இல்லை. அன்றைக்கு தான் முதன்முதலாக கோவிந்ராஜியிடம் நகையை அடமானம் வைக்க சொல்லியிருக்கிறார். அன்றைய தினம் எத்தனை மணிக்கு போய், எத்தனை மணிக்கு நகையை கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் வேலைக்கு போய்விட்டேன். நான் வீட்டிற்கு வரும்போது அன்று மாலை 7மணிக்கு என் மனைவி வீட்டில் இருந்தார். நான் வீட்டிற்கு வந்தவுடன் நான் கேட்பதற்கு முன்பாகவே என்னிடம் இந்த விவரங்களை சொன்னார். கோவிந்தராஜிடம் போய் நகையை கொடுத்து விட்டு வந்திருக்கிறேன், முத்து பைனான்சில் அடமானம் வைத்துவிடடு பணம் கொடுக்க சொல்லியிருக்கிறேன் என்று சொன்னார். போலீசார் விசாரிக்கும்போது, என் மனைவி வேம்பூண்டிக்கு போய் கோவிந்தராஜிடம் போய் நகையை கொடுத்ததாக சொல்லியுள்ளேன். என்மனைவி எவ்வளவு பணம் கேட்டு நகையை அடகு வைக்க கொடுத்தார் என்றால் ரூ.90,000ம் அடகு வைக்க சொன்னதாக சொன்னார். வைத்து தரேன் என்று சொன்னார். அதனால் வந்துவிட்டேன் என்று சொன்னார். எந்த நம்பிக்கையில் நகையை கொடுத்துவிட்டு, பணம் இல்லாமல் வந்தாய் என்று கேடடேனா என்றால் இல்லை. சொந்தக்காரப்பையன் என்பதால் நம்பிக்கையில் கேட்கவில்லை. நான் 7வது வரை படித்துள்ளேன். எனக்கு ஓரளவிற்கு எழுத்து கூட்டி படிப்பேன். போலீசார் விசாரிக்கும்போது, ரூ.90,000ம் வைக்க சொல்லி என் மனைவி நகையை கொடுத்துவிட்டு வந்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. என் மனைவி சொன்னதை நான் சொன்னேன். நான் போலீசிடம் சொன்னேன். ஆனால் அவர்கள் பதிவு செய்தார்களா, இல்லையா என்று தெரியவில்லை. போலீசார் என்னிடம் படித்து காட்டவில்லை. படித்து காட்டாத காரணத்தினால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். 3ம் தேதிக்கு பிறகு இந்த பணம் சம்மந்தமாக என் மனைவி வேம்பூண்டிக்கு சென்று கோவிந்தராஜிடம் பணம் ஏதாவது கேட்டாரா என்றால் இல்லை. 3ம் தேதியிலிருந்து 11ம் தேதி வரை இடைப்பட்ட காலத்தில் என் மனைவி கோவிந்தராஜிடம் பணம் கேட்கவில்லையா என்றால் 10ம் தேதி இரவு கேட்டிருக்கிறார், மறுநாள் காலையில் நான் 8 மணிக்கு வேலைக்கு போகும்போது, பணம் ரெடியாக இருக்கிறது என்று கோவிந்தராஜ் சொன்னதாக

என் மனைவி என்னிடம் சொன்னார். 11ந்தேதி வேலைக்கு போகும்போது தான் சொன்னார். 10ந்தேதி எத்தனை மணிக்கு கோவிந்தராஜ் சொன்னதாக என் மனைவி சொன்னதாக நேரத்தை சொல்லவில்லை. 11ந்தேதி வேலைக்கு போகும்போது என் மனைவி என்னிடம் பணம் ரெடியாக இருக்கிறது வந்து வாங்கிபோங்க என்று கோவிந்தராஜ் சொன்னதாக என்னிடம் என் மனைவி கூறினார். அந்த பணத்தை எங்கு வந்து வாங்கி செல்ல சொன்னதாக சொன்னார் என்றால் அவ்வாறு என் மனைவி சொல்லவில்லை. அவ்வாறு இடத்தை குறிப்பிட்டு என்னிடம் சொல்லவில்லை. 8 மணிக்கே பணம் தயாராக இருக்கிறது என்று சொன்ன என் மனைவி ஏன் காலையிலேயே போகாமல் மாலையில் போனார் என்றால் என் மனைவி என்னிடம் சொல்லும்போதே பணம் ரெடியாக இருக்கிறது சாயந்தாரம் வந்து வாங்கி போங்க என்று சொன்னதாக சொன்னார். நீங்க தயாராக இருக்கும் பணத்தை ஏன் உடனடியாக போய் வாங்கி வா என்று நானும் சொல்ல்வில்லை என்றால் சரிதான். அன்றையதினம் முழுவதுமே என் மனைவி அன்று வேலைக்கு போனாரா வீட்டில் இருந்தாரா என்று நான் வேலைக்கு போனதால் தெரியாது. வேலைக்கு போகும்போது கூட என் மனைவி விக்கிரவாண்டி போவதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.எனக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் என்றால் சரிதான். 12 மற்றும் 10 வயதுடையவர்கள். சம்பவம் நடந்தபோது ஒருவருக்கு 8 மற்றும் 4 வயது. என் வீட்டில் நான் என் மனைவி என் அப்பா இருக்கிறார். என் அப்பாவும் அவ்வளவாக படித்தவர் அல்ல. அவருக்கு 56 வயது. என் மனைவி வீட்டிலிருந்து வெளியே போகும்போது என் அப்பாவிடம் சொல்லி செல்லும் பழக்கம் இல்லை. அன்றையதினத்தில் என் இரண்டு பிள்ளைகளும் வீட்டில் இருந்தார்கள். அந்த பிள்ளைகள் விவரமானவர்களா என்றால் சரிதான். அந்த பிள்ளைகளிடம் என் மனைவி தான் எங்கே போய் வருகிறேன் என்று என் மனைவி சொல்லமாட்டார். என் மனைவியிடம் செல்போன் இருந்தது. என் மனைவி செல்போனை தொடர்ந்து பயன்படுத்துவாரா என்றால் அவருடைய போனை பார்த்தால்தான் போன் போட தெரியும், மனப்பாடமாக தெரியாது. எனக்கு தெரிந்து என் மனைவிக்கு குடிக்கும் பழக்கம் இல்லை. அன்றையதினம் என் மனைவி எத்தனை மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பி போனார் என்றால் சாயந்திரம் கிளம்பி போனார் என்று தெரியும். எத்தனை மணிக்கு போனார் என்று குறிப்பிட்டு தெரியாது. வீடூரிலிருந்து எந்த பேருந்தில் கிளம்பி போனார் என்றால் எனக்கு தெரியாது. பேருந்தில் போக வேண்டும் என்றால் என் வீட்டிலிருந்து ஒரு தெரு தள்ளி வந்தாலே அருகில் பஸ் நிற்கும். அங்கிருந்து பஸ்ஸில் போகலாம். என் மனைவி எத்தனை மணிக்கு பஸ் ஏறினார் என்று அங்கிருந்தவர்கள் யாரும் பார்த்தார்களா என்றால் இலலை. நான் வீட்டிற்கு மாலைசுமார் 7 மணிக்கு வந்தேன். போலீஸ் விசாரணையில் மாலை 7 மணிக்கு வீட்டிற்கு வந்ததாக சொல்லயுள்ளேன். அந்த நேரத்தில் என் ஊரிலிருந்து திண்டிவனம் போவதற்கும், விக்கிரவாண்டி போவதற்கும் பஸ் உள்ளது. மாலை நேரத்தில் எத்தனை மணிக்கு பஸ் உள்ளது என்றால் மாலை 3 மற்றும் 4 மற்றும் 5 மணியில் உள்ளது. 5 மணிக்குமேல் இரவு 8 மணிக்கு ஒரு பஸ் உள்ளது. அவர்

கிளம்பி போகும்போது நான் இந்த ஊருக்கு தான் போகிறேன் என்று கைப்பேசி மூலம் என்னிடம் சொல்லவில்லை. விக்கிரவாண்டியில் இருந்தும் என்னிடம் கைப்பேசியில் பேசவில்லை என்றால் சரிதான். 11ந்தேதி இரவு நான் வீட்டிற்கு வரும்போது என் பிள்ளைகள் என் அப்பா வீட்டில் இருந்தார்கள். என் பிள்ளைகளோ, அப்பாவோ என் மனைவி பற்றி எதுவும் சொல்லவில்லை. நான் 7 மணிக்கு வந்ததை தெரிந்துகொண்டு தனலட்சுமி சுமார் 7.30 மணிக்கு சொன்னார். என் மனைவி நான் கோவிந்தராஜை பார்க்க போகிறேன் என்று என்னிடம் சொன்ன பிறகு அதே விஷயத்தை தனலட்சுமியிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றால் சரி அல்ல. சொல்லிவிட்டு போனார். என் மனைவி தனலட்சுமியிடம் சொல்லிவிட்டு போனதாக, தனலட்சுமி வந்து என்னிடம் சொன்னதாக சொல்வதே பொய் என்று சொன்னால் சரி அல்ல. வீட்டில் என் பிள்ளைகள் மற்றும் என் அப்பாவிடம் சொல்லாமல் இரண்டு வீடு தள்ளியிருக்கும் தனலட்சுமியிடம் சொல்லிவிட்டு போனதாக சொல்வது பொய் என்றால் சரி அல்ல. மைத்துனர் முருகன், ஆறுமுகம் ஆகியோர்களின் கைப்பேசி எண்கள் என்னிடம் உள்ளது. 11ந்தேதி இரவு நீண்ட நேரம் ஆகியும் என் மனைவி வராத காரணத்தால் என் மைத்துனர் முருகனிடமோ, ஆறுமுகத்திடமோ கேட்கவில்லை என்றால் ஆம் கேட்கவில்லை. அன்று இரவு முழுவதும் கேட்கவில்லை. மறுநாள் நான் போனில் கேட்கவில்லை. நேரில் போய் கேட்டேன். மறுநாள் என்றால் 12.01.2017ந்தேதி கேட்டேன் என்றால் சரிதான். பகல் 11மணிக்கு போய் கேட்டேன். கோவிந்தராஜ் வீடும் என் மச்சான் வீடும் ஒரே தெருவில் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சரிதான். முதன்முதலில் நான் என் மாமனார் வீட்டிற்கு போய் கேட்டேன் அதன்பிறகுதான் கோவிந்தராஜ் இடம் கேட்டேன் அவர் சரியாக பதில் சொல்லவில்லை. நான் மாமியார் வீட்டிற்கு போகும்போது என் மாமியார், மாமனார், மச்சான்களை பார்த்தேன். அவர்களிடம் நேற்று பணம் வாங்கி வந்த என் மனை ரெஜினா வீடு திரும்பவில்லை என்று என் மச்சான்களிடம் சொன்னேன். வேம்பூண்டி போய் என் மச்சானிடம் சொன்னேன் என்ற விவரத்தை போலீசிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். ஆறுமுகமிடமும் சொன்னேன. முருகனிடமும் சொன்னேன். மாமனார் மாமியாரிடம் சொல்லவில்லை. கோவிந்தராஜிடம் கேட்கும்போது நான் மட்டும்தான் போய் கேட்டேன். என் மச்சான்கள் வரவில்லை. அவரிடம் போய் கேட்டபோது கோவிந்தராஜ் சரியாக பதில் சொல்லவில்லை என்றால் சரிதான். கோவிந்தராஜிடம் போய் கேட்டேன் அவர் சரியாக பதில் சொல்லவில்லை என்ற விவரத்தை என் மச்சான்கள் ஆறுமுகம், முருகனிடம் சொன்னேன். இந்த விவரத்தை போலீஸ் விசாரிக்கும்போது கோவிந்தராஜ் சரியாக பதில் சொல்லவில்லை என்று என் மச்சான்களிடம் சொன்னேன் என்று போலீசிடம் சொல்லவில்லை. நான் சொன்னவுடன் என் மச்சான்கள் இரண்டு பேரும் சென்று கோவிந்தராஜை கேட்டார்களா என்றால் இல்லை. நான் வேம்பூண்டிக்கு போகவில்லை என்றாலும், வேம்பூண்டியில் என் மச்சான்களை பார்க்கவில்லை என்றாலும், கோவிந்தராஜையும் பாாக்கவில்லை என்று சொல்வது சரி அல்ல. அதன்பிறகு

சொந்தக்காரர் வீடுகள் எல்லாம் போய் பார்த்தேன். பக்கத்தில் ஊரல் என்ற ஊர் இருக்கிறது. அங்கு போனேன். அங்குள்ளவர்களிடம் விசாரித்தேன். அதன்பிறகு கூட்டேரிப்பட்டு அருகில் கோவிந்தாபுரமோ ஊர் பெயர் சரியாக நினைவில்லை அங்கு போய் பார்த்தேன். பின்னர் மெட்ராஸில் உள்ள அவரது அக்கா வீட்டிற்கு போன் செய்து கேட்டேன். அங்கேயும் வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஊரலுக்கு போகும்போது நான் தனியாக போய்தான் கேட்டேன்.

<u>மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது. (பிற்பகல் 1.30)</u>

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( பிற்பகல் 3.51 - 4.50 )</u>

எந்தெந்த உறவினர் வீட்டிற்கு யார் யார் வீட்டிற்கு எந்தெந்த தேதிகளில் போனேன் என்று ஊர் பெயர் எல்லாம் சொல்லவில்லை, உறவினர்கள் வீட்டிறகு சென்று விசாரித்ததாக சொன்னேன். என் மனைவி காணவில்லை என்றவுடன் பதட்டம் அடைந்து நான் புகார் கொடுக்கவில்லை என்றால் நான் தேடிக்கொண்டு தான் இருந்தேன். உடனடியாக எந்த காவல்நிலையத்திற்கு போய் புகார் கொடுக்கவில்லை. உண்மையிலேயே என் மனைவி மேல் அன்பு இருந்தால் நான் உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. என் மனைவி மேல் அன்பு இல்லாததால் தான் போனல் போகட்டும் என்று விட்விட்அடன் என்றால் சரியல்ல. சாட்சி சொல்கிறார், என் மச்சான்கள், உடனடியாக புகார் கொடுக்கவேண்டாம், உறவினர்கள் வீட்டில் தேடிப்பார்த்துவிட்டு புகார் கொடுக்கலாம் என்று கூறியதால் உடனடியாக புகார் கொடுக்கவில்லை. 10 நாட்கள் வரை புகார் கொடுக்காததற்கு என் மனைவி மீது பற்று இல்லாததுதான் காரணம் என்றால் சரியல்ல. சொந்தக்காரர்கள் வீட்டில் தேடிப்பார்த்துவிட்டு புகார் கொடுக்கலாம் என்று இருந்துவிட்டோம். 12ம் தேதி கோவிந்தராஜிடம் கேட்டபிறகு அவர் சரியாக பதில் சொல்லாததால் சந்தேகம் ஏற்பட்டவுடன் உடனே புகார் கொடுத்திருக்கலாம் அல்லது மறுநாள் போய் புகார் கொடுத்திருக்கலாம், ஆனால் அவ்வாறு புகார் கொடுக்காமல் இருந்ததற்கு காரணம் கோவிந்தராஜ் மீது எனக்கு சந்தேகம் இல்லை என்றால் என் மச்சான்கள் சொன்னதால் பொறுமையாக காத்திருந்தேன். நான் பொறுமையாக 4,5 நாட்கள் தேடிப்பார்த்தேன். அந்த 4, 5 நாட்களிளாவது புகார் கொடுத்திருக்கலாம், ஆனால் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றால் அப்போது ஜல்லிக்கட்டு போராட்டம் எல்லாம் நடந்துகிட்டு இருந்தது. அந்த நேரத்தில் பொறுமையாக தேடிப்பார்த்துவிட்டு புகார் கொடுக்கலாம் என்று மச்சான் சொன்னதால் புகார் கொடுக்கவில்லை. என் மச்சான் ஆறுமுகம், முருகனோ இவ்வாறு தேடிப்பார்த்தோம் காணவில்லை, புகார் கொடுத்துவிட்டு தேடலாம் என்று சொல்லவில்லை. போஸ்டரில் நான் பார்க்கும் வரையிலும் கோவிந்தராஜ் மீது மட்டும் தான் எனக்கு சந்தேகம் இருந்தது, வேறு யார் பெயரிலும் சந்தேகம் வரவில்லை. கோவிந்தராஜ் மீது சந்தேகம் வராததால் தான் புகார்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்துபோனது என் மனைவி தான் என்று அயையாளம் காட்டுவதற்காக தான் ஆரஞ்சு கலர் புடவை கட்டியிருந்ததாகவும், தனலட்சுமி என்னிடம் கூறியதாக கூறுவது, என் மனைவியை அடையாளம் காட்டுவதற்கு ஒரு பெண் சாட்சி வேண்டும் என்று போலீஸ் சொன்னதால் தனலட்சுமியை சாட்சியாக சேர்த்துவிட்டோம் என்றால் சரியல்ல. தனலட்சுமி என்பவர் என்னாலும், போலீசாரும் கற்பனையாக ஜோடிக்கப்பட்ட ஒரு சாட்சி என்றால் சரியல்ல. தனலடசுமியிடம் என் மனைவி கோவிந்தராஜிடம் போய்விட்டு வருகிறேன் என்று சொன்னார் என்று என்னிடம் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 11ம் தேதி என் மனைவி என்னிடம் நான் மேலே சொன்னதுபோல் என்னிடம் எதுவும் சொல்லவிட்டு போகவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் சொல்லிவிட்டு போகாத காரணத்தினால் தான் அந்த கோபத்தில், என் மனைவி காணாமல் போனது குறித்து நான் உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விக்கிரவாண்டி பஸ்நிலையத்தில் என் மனைவியின் போஸ்ட்டரை சுமார் காலை 11 மணிக்கு பார்த்தேன். வீட்டில் காலை 8 மணிக்கு கிளம்பினேன். போஸ்ட்டரை நான் பார்க்கும்போது 11 மணி. அந்த போஸ்ட்டர் விக்கிரவாண்டி பஸ்டேண்டில் ஒட்டப்பட்டிருந்தது. 4 அங்குலம் மாத காலண்டர் அளவிற்கு போஸ்டர். கலர் போஸ்ட்டர் தான். அந்த போஸ்ட்டரில் ஏதாவது செல்நம்பர் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் அந்த அளவிற்கு நான் கவனிக்கவில்லை. போஸ்டரை மட்டும் தான் நான் பார்த்தேன். விக்கிரவாண்டி பஸ்டேண்டிற்கு பக்கத்தில் தான் போலீஸ்டேஷன் இருக்கிறது என்றால் சரிதான். ஆனால் அதில் ரோஷனை காவல்நிலையம் என்று எழுதப்பட்டிருநு்தது. உடனே நான் விக்கிரவாண்டி காவல்நிலையத்திற்கு போய் இவ்வாறு போஸ்ட்டர் ஒட்டியிருக்கிறது என்று சொல்லவில்லை. எங்கள் ஊரில் ஏதாவது ஒரு பிரச்சனை என்றால் விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் தான் சொல்வோம் என்றால் சரிதான். ஆனால் விக்கிரவாண்டி காவல்நிலையத்திற்கு சென்று இந்த வழககு சம்மந்தமாக புகாரை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தனலட்சுமி, சரோஜா, பாலாஜி, குமார் ஆகியோர்களுக்கு தகவல் கொடுத்தேன். அவர்களும், ஊர்க்காரர்களும் வந்துவிட்டார்கள். என்னுடைய செல்போனிலிருந்து அந்த 4 பேருக்கும் தகவல் சொன்னேன். அந்த நான்கு பேரின் கைப்பேசிஎண் என்னிடம் இருந்தது. என் மனைவியின் செல்நம்பரும் என்னுடைய செல்போனில் இருந்தது என்றால் சரிதான். என் மனைவி காணாமல் போன இடைப்பட்ட காலத்தில் என் மனைவிக்கு நான் போன் செய்யவில்லை. என் மனைவி போகும்போது கையில் செல்போன் வைத்திருந்தாரா தெரியவில்லை. என்மனைவி காணாமல் போன பிறகு செல்போன் வீட்டில் இருந்ததா என்று தேடிப்பார்க்கவில்லை. சாட்சி சொல்கிறார், நான் போன் செய்தபோது சுச்ஆப் என்று வந்தது. எந்த தேதியில் அவ்வாறு நான் போன் செய்து சுச்ஆப் என்று வந்தது என்றால்தேதி தெரியவில்லை. தனலட்சுமி, சரோஜா, பாலாஜி, குமார் ஆகியோர்கள் 12,1 மணிக்கு வந்தார்கள். அந்த 4 பேரும் வீடூரிலிருந்து பஸ்சில் வந்தார்களா, வண்டியில் வந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. அந்த தனலட்சுமி, சரோஜா, பாலாஜி, குமார்

அழைத்துக்கொண்டு ரோஷனை காவல்நிலையத்திற்கு போனேன். ரோஷன காவல்நிலையம் எங்க இருக்கிறது ௭னறு கேட்டுக்கொண்டு தான் போனேன். திண்டிவனத்தில், செஞ்சி பஸ் ரோட்டில் சற்று உள்ளே ரோஷனை காவல்நிலையம் உள்ளது. நான் ரோஷனை காவல்நிலையம் சென்றபோது மாலை 4, 4.30 மணி இருக்கும். அங்கு விசாரித்தபிறகு உடனே எங்களை முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். முண்டியம்பாக்கம் போகும்போது சுமார் மாலை 6,7 மணி இருக்கும். அதன்பிறகு போஸ்ட்மார்டம் நடந்தபிறகு வீட்டிற்கு போக சொல்லிவிட்டார்கள், வந்துவிட்டோம் என்றால் சரிதான். என் மனைவியின் பிரேதம், பிரேத அறையில் தான் இருந்தது. அங்கு தான் பார்த்தேன். நான் என்னுடைய செல்போன் நம்பரை ரோஷனை காவல்நிலையத்தில் கொடுத்துவிட்டு தான் வந்தேன். 24ம் தேதி போன் செய்து என்னை வரச்சொன்னார்கள் என்றால் சரிதான். காலையில் 8 மணிக்கு எனக்கு போன் செய்தார்கள், 10 மணிக்கெல்லாம் காவல்நிலையம் போய்விட்டேன். 24.1.2017ம் தேதிக்கு முன்பு எந்த தேதியில்போய் பிரேதத்தை பார்த்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தினம் என் அண்ணன் வரவில்லை. 24ம் தேதி ரோஷனைக்காவல்நிலையத்திற்கு என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் பாலாஜி, சங்கர், கிருஷ்ணமூர்த்தி, ஜெயராமன் மற்றும் ஊர் பெரியவர்கள் 2,3 பேர் வந்தார்கள். 24.1.2017ம் தேதி சரரோஜாவும், தனலட்சுமியும் காவல்நிலையம் வரவில்லை என்றால் சரிதான். முண்டியம்பாக்கம் மருததுவமனையில் பிரேதத்தைபார்க்கும்போது என் மச்சான் இரண்டுபேரும் வந்தார்கள். நான் போஸ்ட்டரை பாாத்தவுடன் தான் என்மச்சான் இருவருக்கும் போன் செய்து சொன்னேன் என்றால் சரிதான். அன்றைய தினம் நான், சரோஜா, தனலட்சுமி, என் மச்சான்கள் பாலாஜி, குமார் இரண்டு பேர் ஆகியோர்களை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. பிரேதம் உங்களுடையது தானா என்று கேட்டார்கள். 24.1.2017ம் தேதி என் மச்சான்கள் வந்தார்கள். அன்றைய தினத்தில் என் மச்சான் இருவரையும் போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 24.1.2017 அன்று போலீசார் எங்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் யார் மீது சந்தேகம் என்று கேட்டு விசாரித்தார்கள், சொன்னேன். வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் வாக்குமூலம் என்றால் எனக்கு புரியவில்லை, சொன்னேன். நான் சொன்னதை கையால் எழுதிக்கொண்டார்கள். காவல்நிலையத்தில் வைத்து எழுதினார்கள். என்னை கேட்டது பற்றி தான் எனக்கு தெரியும். எழுதியவர் யார் என்று எனக்கு தெரியாது, போலீஸ் தான் எழுதினார். 26.1.2017 அன்று காலை 8 மணிக்கு மேல் போலீசார் எனக்கு போன் செய்தார்கள் ௭னறால் சரிதான். எதிரிகளை கைதுசெய்துவிட்டோம் என்றும், அவர்களை அடையாளம் காட்டுங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அடையாளம் காட்டினேன். நான் அடையாளம் காட்டும்போது பகல் 11,12 மணி இருக்கும். கோவிந்தராஜை தெரியும், மற்ற 3 பேரை எனக்கு தெரியவில்லை என்று சொன்னேன். நீதிமன்றத்தில் காட்டிய அனைத்து நகைகளையும் 26.1.2017ம் தேதி பகல் 11 மணிக்கெல்லாம் நான் காவல்நிலையத்தில் அடையாளம்

காட்டினேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் போலீசார் இருந்தார்கள், காவல் ஆய்வாளர் தான், யார் யார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என் மனைவிகளும் எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு என் வீட்டைவிட்டு என் மனைவி என்னிடம் சொல்லாமல் போய்விட்டார் என்றால் சரியல்ல. அதனால் எனக்கும், என் மனைவிக்கும் இடையே பிரச்சனை இருந்த காரணத்தினால் தான் அவர் வெளியே கிளம்பி காணாமல்போனபிறகும் நான் உடனடியாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் என்மாமியார், மச்சானுக்கும், எனக்கும் பிரச்சனை இருந்த காரணத்தினால் தான் என் மச்சானிடம் தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் காட்டிய நகை என்னுடைய நகை கிடையாது என்று சொல்வது சரியல்ல. அது என்மனைவி நகை தான். அதனால் தான் அது என்ன நகை என்று போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசிடம் நான் சொன்னேன். என் மனைவி கோவிந்தராஜிடம் நகையை கொடுத்து அடமானம் வைக்க சொல்லவில்லை என்று சொல்வது சரியல்ல. இந்த வழக்கில் என் மனைவி இறந்துபோன உடனே வேறு யாரையும் தேடிப்பிடிக்காத போலீசார், அப்பாவிகளான 4 எதிரிகளையும் இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துவிட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. என் மனைவியை யாரோ, ஏதோஒரு காரத்திற்காக யாரோ கொலை செய்திருக்கிறார் என்றாலும், எதிரிகள் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக்காடுத்து தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருக்கும்பட்சத்தில் நான் உடனடியாக சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எதுவும் நடக்காத காரணத்தினாலும், கோவிந்தராஜ் மீது 10 நாட்களாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>நீதிமன்ற கேள்வி?</u>

அந்த நகையை நான் மேலே சொன் னசான்று பொருட்களை சி.எம்.பி.349/2017 நீதித்துறை நடுவர்எண்.1 திண்டிவனம் அவர்களிடமிருந்து 3.2.2017 அன்று இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். அதை தான் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன்.